பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත්සභාව

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

மாகாண சபை வளாகம், A9வீதி, கைதடி

පළාත්සභාවසංකීර්ණය,A9පාර, කයිතඩි

**Provincial Council Complex , A9Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


எனது இல: NP/09/A&P/04/12/CIR/2024 திகதி : 09/08/2024

மாகாண நிதிச் சுற்றறிக்கை இலக்கம்: **PF/AP/2/2024**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

1992 ஆம் ஆண்டின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் 01/2020 இலக்க 2020.08.28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் விதிகளில் திருத்தம் செய்தல்

நி.ஒ **113** (மா.நி.வி **77)** இன் கீழ் பிறவிட்டுவிடுதல் மற்றும் அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்கின் கீழ் வழங்கப்படும் கடன் மற்றும் முற்பணத்தினை விட்டுவிடுதல்

பொது நிதிகள் திணைக்களத்தின் 01/2024 இலக்க 29.05.2024 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை மீது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

01. பின்னணி

1.1 வருமான நிலுவை மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய பெறுவனவுகளை (முற்பண "பீ" கணக்கின் தொகை உட்பட) குறிப்பிட்ட காலத்தில் சேகரிப்பதற்காக விசேட விதிமுறைகளை ஏற்படுத்துவதனை உறுதிப்படுத்துவது கணக்கீட்டு உத்தியோகத்தர்களது மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களது பொறுப்பாவதுடன் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் இவ்வாறு செயற்படுவதனை கணக்காணிப்பதற்குரிய விதிமுறைகளை திட்டமிடல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். நி.ஒ. 124 (மாகாண நிதி விதி 93) இன்படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக நியமனம் பெறும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் கடிதத்திலும் இந்த விடயம் குறிப்பிடப்படும். ஆதலால் பிரதான கணக்கீட்டு உத்தியோத்தர்கள் கணக்கீட்டு உத்தியோத்தர்கள் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோத்தர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி நடவடிக்கை எடுப்பதன் ஊடாக விரைவான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், தமது அதிகாரத்திற்குட்பட்ட எல்லைக்குள் குறித்த செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் மட்டுமே பிரதம செயலாளர், வ.மா அவர்களின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு மாகாணத் திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேலும் அரச நிறுவனங்களினால் அறிக்கையிடப்படும் வருமான நிலுவை மற்றும் முற்பண "பீ" கணக்கு நிலுவைத்தொகையினை அறவிடுதல் தொடர்பாக சரியான முறையில்

செயற்படுவதில்லை என்பது தொடர்பாக கடந்த காலங்களில் அரசாங்க கணக்குகள் குழுவின் கவனத்திற்கு வந்துள்ளது.

1.3 ஆதலால், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நிதி ஒழுங்குவிதி, திறைசேரி மற்றும் அரச நிர்வாக சுற்றுநிருபங்களுக்கமைய வருமான நிலுவை மற்றும் கடன் நிலுவை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. அதன்படி 1992 நிதி ஒழுங்குவிதியின் 113(3) (மாகாண நிதி விதி 77.2) மற்றும் 01/2020 இலக்க 2020.08.28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையில் உள்ளடங்கியுள்ள நி.ஒ. 113 (06) இன் நடைமுறை 2024.06.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

02. நி. ஒ. 113 (03) – பிறவிட்டுவிடுதல்கள் (அகற்றுதல்) (மா.நி.வி 77.2)

2.1 இயலுமானவரை நியாயமானவகையில் வருமான மதிப்பீட்டினை தயாரிக்க வேண்டியதுடன் குறித்த வருடத்திற்குள் அடையாளம் காணப்பட்டுள்ள மதிப்பீட்டு குறைபாடுகளை சரி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளினை அந்த வருடத்திற்குள்ளேயே மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் கணக்கு செய்யும் போது ஏற்படும் தவறுகளால் வருமான நிலுவையாக கணக்குகளில் காட்டப்படும் பெறுமதியினை குறித்த கணக்கினை சீர் செய்வதன் மூலம் கணக்குகளிலிருந்து நீக்குதல் வேண்டும்.

2.2 1992 நி.ஒ. 113 (03) (அ) மற்றும் (ஆ)(மா.நி.வி 77.2) இன் கீழ் கணக்கிடப்படும் அறவிடமுடியாத அரச வருமானத்தையோ, அரசிற்கு கிடைக்க வேண்டிய வேறு தொகையினையோ அறவிடுவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்த நிலையிலும் அவ் நிலுவைத் தொகை தொடர்ந்தும் பேணப்படுவது பயனற்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் திருப்திப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே அவர் **தனித்தனியாக ஒவ்வொருவிடயத்திற்கும் ரூபா. 100,000.00 ற்கு மேற்படாதவாறு நீக்குவதற்குரிய அதிகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு** வழங்கப்படுகின்றது.

2.3 நி. ஒ. 113 (03) (இ) இன்படி கைவிடுவதற்காக (நீக்குவதற்கு) பிரதம செயலாளர், **வடமாகாணம் அவர்களுக்கு வேண்டுகோள் முன்வைக்க வேண்டியது மேலே 2.2 இன் கீழ்** பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு செயற்பட முடியாத, அதிகாரமற்ற ரூபா. **100,000.00 ஐ விட மேற்பட்ட தொகை** காணப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே ஆகும்.

03. நி. ஒ. 113 (06) – முற்பண "பீ" கணக்கின் கீழ் வழங்கப்படும் கடன் மற்றும் முற்பணங்களை விட்டுவிடுதல்

அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இல் உள்ளடங்கியுள்ள நி.ஒ. 113 (06) இல் அரச அலுவலரின் முற்பண "பீ" கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றது.

3.1 நி.ஒ. 113 (06) (அ) : அரச அலுவலர் முற்பணக்கணக்கு வரவு வைக்கவேண்டிய கடனையோ, முற்பணத்தையோ அறவிடமுடியாக்கடனாக விட்டுவிடுதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டியது இந் நிதி ஒழுங்குவிதிகளின் கீழாகும் என்பதுடன் அவ்வாறான கடன்/ முற்பணமாக வழங்கப்பட்ட நிதித் தொகையினை புத்தகத்தில் இருந்து பதிவழிப்புச் செய்வது அவ்வாறு நீக்கப்படுவதற்கு உரிய அங்கீகாரமானது எழுத்து மூலம் பெறப்பட்ட பின்னர் மாத்திரமேயாகும்.

3.2 நி.ஒ. 113 (06) (ஆ) : அரச அலுவலர் முற்பண "பீ" கணக்கின் கீழ் வழங்கப்பட்ட கடன் / முற்பணத்தின் தொகையில் நட்டம் ஏற்படுவதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் குறித்த கடனையோ, முற்பணத்தை மீளவும் அறவிடுவதற்கு எடுக்கப்படவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அரச அலுவலர் முற்பண "பீ" கணக்கினுடாக வழங்கப்பட்ட கடன் / முற்பணத்தினை அறவீடு செய்யும்போது கடைப்பிக்கப்படவேண்டிய விடயங்களை, அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இனூடாக அடையாளப்படுத்தப்பட்ட நிதி ஒழுங்கு விதி 113 (06) இன் வழிமுறைகளுக்குரிய வழிகாட்டல் இலக்கம் 01 இல் காட்டப்பட்டுள்ளது. குறித்த வழிகாட்டல் அரச நிதி திணைக்கள வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும். இவ் வழிகாட்டலில் உள்ள விடயங்களை உள்ளடக்கி வட மாகாணத் திறைசேரியினால் வெளியிடப்பட்ட PF/CL/AP/02/2020 இலக்க 27.07.2020 ஆம் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபக் கடிதமானது, அரச அலுவலர் முற்பண "பீ" கணக்கின் ஊடாக வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணம் என்பவற்றை மீள அறவிட்டுக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

3.3 நி.ஒ 113 (06) (இ) நிலுவையை அறவிடுவதற்குரிய வழிகாட்டல் இல 1 இல் குறிப்பிட்டவாறு எடுக்க வேண்டிய அனைத்துவிதமான நிர்வாக நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தனிப்பட்டரீதியில் திருப்தி அடைவாராயின் இடைக்கால நடைமுறையின் கீழ் பந்தி இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைகள் மற்றும் மட்டுப்பாட்டின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3.4 அதன்படி கடன் மற்றும் முற்பணத்தினை அறவிட மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதன் பின்னர் மேலும் குறித்த கடனை அறவிட முடியாத சந்தர்ப்பத்தில் கடன் / முற்பணத்திற்காக செல்லுபடியாகும் பிணையாளர்கள் தேவைப்படாத அலுவலர்கள் சேவையை விட்டுச் செல்லல் / சேவையை விட்டு விலகும் போது, நியமன அதிகாரியினால் அலுவலரின் சேவை முடிவுறுத்தப்படும் போது, பணிநீக்கம் செய்யும் போது / சேவை நிறுத்தம் செய்யும் போது மற்றும் இறந்த அலுவலர்கள் போன்ற வகுதியினர்களுக்கு இந்த இடைக்கால நடைமுறையினை கருத்தில் கொண்டு விரைவான நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

04. இடைக்கால நடைமுறைகள்

4.1 தற்போது கணக்கு மற்றும் புத்தகங்களிலிருந்து நீக்க இயலாதுள்ள, நீண்ட காலமாக அறவிடப்படாதுள்ள கடன் தொகையினை விட்டுவிடுவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு பின்வரும் விசேட மட்டுப்பாடுகளின் கீழ் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையினை சீர் செய்வதற்கு / வெட்டி விடுவதற்கு / விட்டுவிடுவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் / கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் தனிப்பட்டரீதியில் கவனம் செலுத்துவதுடன் அது தொடர்பான அறிவுறுத்தல்களை சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் / பிரதம கணக்காளர்கள் / கணக்காளர்கள் / நிதி உதவியாளர்கள் / வேறு பொருத்தமான அலுவலர்களிற்கு எழுத்து மூலம் வழங்கப்பட வேண்டும். **இந்த விசேட மட்டுப்பாடுகள் 2024.12.31 ஆம் திகதி வரை மாத்திரமே நடைமுறையில் இருக்கும்** என்பதனால் கடன் தொகையினை விட்டுவிடுதல் செயற்பாடுகளை குறித்த திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியதுடன் விட்டுவிடுதல் செய்யப்படும் கடன் தொகை தொடர்பான விபரங்களை 2025.01.31 இற்கு முன் பிரதம செயலாளர் வடமாகாணம் அவர்களுக்கு அறிக்கையிட வேண்டும்.

**கடன் அறவிடுவதனை விட்டுவிடுதல்**

- 5 வருடத்தை விடக் குறைந்த காலமுள்ள கடன் தொகைக்கு -
  ஒவ்வொரு அலுவலர் தொடர்பிலும் 25,000/= பெறுமதியான கடன் தொகைக்கு மேற்படாதவாறு

- 5 - 10 வருட கால கடன் தொகைக்கு -
  ஒவ்வொரு அலுவலர் தொடர்பிலும் 50,000/= பெறுமதியான கடன் தொகைக்கு மேற்படாதவாறு

- 10 - 20 வருட கால கடன் தொகைக்கு -
  ஒவ்வொரு அலுவலர் தொடர்பிலும் 75,000/= பெறுமதியான கடன் தொகைக்கு மேற்படாதவாறு

- 20 வருடத்திற்கு அதிகமான கடனிற்கு -
  ஒவ்வொரு அலுவலர் தொடர்பிலும் 100,000/= பெறுமதியான கடன் தொகைக்கு மேற்படாதவாறு

4.2 மேலும் மேலே 4(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள மட்டுப்பாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்க இயலாத கடன் தொகை இருப்பின் குறித்த தொகையை அறவிட மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சரியாகக் குறிப்பிட்டு மேலும் மேற்கொள்ளக்கூடிய தொடர் நடவடிக்கைக்காக பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அவர்களுக்கு **2024.09.30 ஆம் திகதிக்கு முன்னர்** அறிவித்தல் வேண்டும்.

4.3 2024.12.31 ஆம் திகதியில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட / வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட / வழக்கு தொடரப்படும் / கடன் தொகைக்கு பொறுப்பான அரச முற்பண "பீ" கணக்கில் 5 வருடத்திற்கு அதிகமான காலம்

தீர்க்கப்படாதுள்ள எந்த ஒரு தொகையினையும் அடுத்த வருடத்திற்கு எடுத்துச் செல்வதை தவிர்ப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும். எவ்வாறாயினும் இது தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் மாகாணத் திறைசேரியின் அலுவலர்களுடன் கலந்துரையாடி பெறப்படும் ஆலோசனையின் படி 2024.12.31 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை தீர்க்க வேண்டும்.

05. கடன் தொகையினை விட்டுவிடுதல் தொடர்பாக மேலே 4 இல் குறிப்பிடப்பட்ட இடைக்கால நடைமுறைகள் செயற்படும் திகதி 2024.12.31 முடிவடைவதனால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அரச நிதிச் சு.நி 01/2020 இல் 3.1 உரையின் கீழ் வழங்கப்பட்டுள்ள 25,000/= மட்டுப்பாடு 2025.01.01 ஆம் திகதியிலிருந்து மீண்டும் நடைமுறையில் இருக்கும் என்பதுடன் குறித்த திகதிக்குப் பின்னர் கடன் நிலுவை தொகையினை விட்டுவிடுதல் தொடர்பாக குறித்த மட்டுப்பாட்டை கருத்தில் கொள்ள வேண்டும்.

06. பொது ஆலோசனைகள்

6.1 கடன் நிலுவையை விட்டுவிடுவதற்கு பிரதம செயலாளரின் அனுமதிக்காக மாகாண திறைசேரிக்கு அனுப்பப்படும் கடிதம் அரச நி.சு 1/2020 இற்கு சமமாக வெளியிடப்பட்ட வழிகாட்டல் இல 1 மற்றும் வடமாகாணத் திறைசேரியினால் வெளியிடப்பட்ட PF/CL/AP/02/2020 இலக்க 27.07.2020 ஆம் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபக் கடிதம் என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அனுப்பப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்து பிரதம செயலாளரின் அனுமதிக்கு அனுப்பப்படும் வேண்டுகோளில் அவ்வாறு குறிப்பிட்டு தனிப்பட்டரீதியில் சிபார்சு செய்து அனுப்பப்படல் வேண்டும்.

6.2 விட்டுவிடுதல் தொடர்பான பரிசோதனைகளில் / வேறு அவ்வாறான காரணங்களின் போது / சட்டம் / நிர்வாகரீதியில் செயற்படும் போது இந்த சுற்று நிருபத்தின் நடைமுறையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளுதல் தடையில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

o/c

இ.இளங்கோவன்
பிரதம செயலாளர்,
வடமாகாணம்,

இ.இளங்கோவன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதிகள்-

1. ஆளுநரின் செயலாளர் - கௌரவ அளுநர் அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக
2. சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம், வ.மா - தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வ.மா - தகவலுக்காக